RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/ irjt224s257

# தமிழ் சமய மரபில் பண்பாட்டு மாற்றங்கள்

**ச. குருஞானாம்பிகா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Changes in Tamil Religious Tradition

**S. Gurugnanambiga** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: gurugnanambiga_tam@avinuty.ac.in

Received: 19-08-2022
Revised: 13-10-2022
Accepted: 05-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Humanity's reason for deification is the fear and love of mankind. Early human beings were afraid of natural disasters such as fire, thunder, rain, etc. They were worshiped as gods because of the fear they hand on those natural disasters. Minor deity worship is a major part of Tamil Nadu culture. This kind of worship was followed by the people from the earliest times. At a certain period the stories about the minor deity appearing next to the big deity became more and more numerous. The worship of 'one deity' then multiplied into two or three deities. The deities keep changing according to the people living in the society. Therefore, the purpose of this article is to explain the cultural records related to idol worship.

**Keywords:** Culture, Minority, Temple structure and orientation, Social changes

## முன்னுரை

மனிதகுலத்தின் தெய்வ வழிபாட்டிற்குக் காரணம், மனித இனத்தின் அச்சமும், அன்பும் ஆகும். ஆதியில் காணப்பட்ட மனித இனங்கள் இயற்கையினால் உண்டாகும் தீ, இடி, மழை, போன்றவற்றிற்காக அஞ்சியும், அச்சத்தைக் கொடுக்கக்கூடிய பெருநோய்களுக்கு பயந்தும் காணப்பட்டனர். பயத்தின் காரணமாகவே தெய்வமாக வழிபட்டனர். சிறுதெய்வ வழிபாடு என்பது தமிழகப் பண்பாட்டியலில் ஒரு பெரும் பிரிவாகக் காணப்படுகின்றது. பெருந்தெய்வ வழிபாடே தொடக்ககாலம் முதலாக மக்களால பின்பற்றப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பெருந்தெய்வத்தை அடுத்து காணப்படும் சிறு தெய்வத்தைப் பற்றிய கதைகள் நிறையப்பெருகிக் கொண்டே வந்தது. ஒரே தெய்வ வழிபாடானது இரண்டு, மூன்று தெய்வ வழிபாடுகளாகப் பெருகியது. அத்தெய்வங்கள், வணங்கப்படும் சமூக மக்களுக்கு ஏற்ப மாறிக்கொண்டே வந்தது என்று முடிகிறது. எனவே சிறுதெய்வ வழிபாடு தொடர்பான பண்பாட்டுப் பதிவுகளை விளக்கும் விதமாக இக்கட்டுரையின் பொருண்மை அமைந்துள்ளது.

## பண்பாடு - விளக்கம்

பல்வேறு மக்கள் சமூகத்தினால், கூட்டுறவினால் உண்டாகியுள்ள வாழ்வானது பல மாறுதல்களைக் கடந்துவந்த போதிலும், அடிப்படையான நாகரித்தினையும், கலாச்சாரத்தினையும் தொடந்து பின்பற்றிக் கொண்டே வருவது பண்பாடு ஆகும்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல"

என்னும் கலித்தொகைப் பாடலானது, பிறரது இயல்பினை உள்ளத்திலிருந்து அறிந்து கொண்டு நடப்பதே பண்பாடு என்று எடுத்துக் கூறுகிறது. பண்படுவது, சீர்படுத்துவது, திருத்துவது, பண்படுத்தப்படுவது என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது. இப்பண்பாடு இரண்டு வகையாகப் பிரித்தாளப்படுகின்றது (Parimanam & Balasubramaniyam, 2004).

## சிறுதெய்வ வழிபாட்டின் இயல்புகள்

- ஆண், பெண் தெய்வங்கள் இருந்தாலும் பெரும்பாலும் பெண் தெய்வங்களே வழிபடப்படுகின்றன.
- தத்துவங்களோடும், ஆகம நெறிக்கும் அப்பாற்பட்டு கிராமப்புறங்களில் உள்ள கிராம மக்களின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவையாக இருக்கின்றன.
- குடும்பத்தில் இறந்தோர் மற்றும் கொலை செய்யப்பட்டோர், மூத்தோர், கன்னிகள் போன்றோர் வழிபாட்டிற்குரிய தெய்வங்களாகக் கருதப்பட்டனர்.
- கோயில்கள் மரத்தடி, கண்மாய், குளக்கரை போன்ற எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருக்கும் தெய்வங்கள் இவை.
- உயிர்பலிகளை ஏற்றுக் கொள்பவையாக அமைந்திருக்கின்றன.
- குடும்பத்துள் மூத்தோர், பண்டாரம், வேளாளர் மற்றும் அந்தந்த சாதிகளில் பெரியோர்களால் பூசைகள் நடத்தப்படுகின்றன.

### வழிபடுவோர்

பிராமணரல்லாத எல்லாச் சமூகத்தினரும் சிறுதெய்வ வழிபாட்டை உடையவர்கள். பிராமணர்களைத் தவிர பிற உயர் சாதியாரிடமும் - புலாலுண்ணாத வேளாளரிடமும் சிறுதெய்வ வழிபாடு மிகக்குறைவாகவே இருந்துள்ளது.

### சிறு தெய்வங்களின் பெயர்கள்

சிறுதெய்வங்களின் பெயர்கள் பெருந்தெய்வங்களின் பெயர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. ஆண் சிறுதெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி போன்ற விகுதிகளோடு அமைந்திருக்கும்.

சான்று : கருப்பையா, இருளப்பன், பனையடியான், கருப்பசாமி

பெண் சிறுதெய்வங்களின் பெயர்கள் அம்மன், நாச்சி, கிழவி முதலிய விகுதிகளோடு அமைந்திருக்கும்.

சான்று : முத்தாலம்மன், பெரியநாச்சி, அரியாக்கிழவி

## கோயில் அமையும் இடங்கள்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. ஆனால் இன்று கோயில்கள் இல்லாத ஊர்களே இல்லை. மக்கள் வசிக்காத இடத்திலும் கூட கோயில்கள் காணப்படுவதைக் காணமுடிகின்றது. சிறுதெய்வங்களின் கோயில்கள் பொதுவாக ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளின் வாசற்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் போன்ற எல்லா இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே பெரும்பாலான சிறு தெய்வங்கள் காவல் தெய்வங்களாகவே அமைந்துள்ளன.

## கோயில் அடையாளங்கள்

சிறுதெய்வக் கோயில்கள் என்பவை பெருந்தெய்வங்கள் கொண்டுள்ள பெரிய கட்டிடங்களைக் கொண்டுள்ள கோயில்களாக இல்லாமல் சிறிய கட்டிட அமைப்புடைய கோயில்களாக விளங்குபவையாகும். சில இடங்களில் அவை கட்டிடமின்றி அமைந்திருத்தலும் உண்டு. இன்னும் சில இடங்களில் மரங்களும், புதருமே தெய்வமாகக் கருதப்பட்டு இன்றளவிலும் வழிபடப்பட்டு திகழ்கின்றன. மரங்கள் பெரும்பாலும், வேம்பு, பனை, உடை, பூவரசு ஆகியவையாக இருக்கும்.

பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கி அமைந்திருக்கும். சிறுபான்மை கிழக்கு நோக்கி அமைந்திருக்கும். ஆண் தெய்வக் கோயில்கள் கிழக்கு நோக்கி அமைவதே வழக்கமாகும். சிறு தெய்வக் கோயில்களில் பெரும்பாலும் ஒன்றிற்கு மேற்பட்ட தெய்வங்கள், மூன்றிலிருந்து இருபத்தொரு தெய்வங்கள் வரை வடக்கு, கிழக்கு, தெற்கு திசை நோக்கி அமைந்திருக்கும்.

## சிறுதெய்வ உருவம்

தெய்வங்களின் வடிவமும், அதன் குணங்களும் அத்தெய்வங்களைச் சார்ந்த சமூகத்தின் தேவையைச் சார்ந்து அமைவதாகும். அச்சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு எப்பொருளின் மீது ஆழ்ந்த ஈடுபாடு காணப்படுகின்றதோ, அதனைப் பொருத்தே சிறு தெய்வங்களின் உருவங்களும் அமைகின்றன. கால்நடைகளை வளர்ப்போர்களின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்த தெய்வமாகவும், உழவர்களின் தெய்வம் மழையினைப் பொழிகின்ற இந்திரனாகவும், கையில் கலப்பையினைக் கொண்டுள்ள பலராமனாகவும் காணப்படும். ஒரு குறிப்பிட்ட இனக்குழு எவ்விதமான உற்பத்தி முறையினைச் சார்ந்து வாழ்கின்றனரோ அதைப் பொறுத்தே அத்தெய்வங்களின் உருவமும் அமைந்திருக்கின்றன.

பெண் சிறுதெய்வங்கள் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் நிலையில், இரண்டு கைகளோடு, தலையில் வெவ்வேறு வகையான மகுடங்களுடன் காணப்படுகின்றன. கைகளில் வேல், கழுத்தில் மாலை, கையில் வளையல்கள், காலில் தண்டை ஆகியவற்றோடு அமர்ந்திருக்கின்றன. பெண் சிறு தெய்வங்களிடையே சில சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தெய்வ உருவங்கள் பெரும்பான்மை கல்லிலும், சிறுபான்மை மண்ணாலும் அமைந்திருக்கும். மண்ணால் (சுதையால்) அமைந்த தெய்வங்கள் வண்ணங்கள் பூசப்பெற்றவையாக இருக்கின்றன.

சான்றாக, உச்சினி (உஜ்ஜயினி) என்னும் மாகாளியம்மனின் சிலையைப் பார்த்தோமேயானால், இடது உள்ளங்கையில் கபாலத்தை ஏந்தியிருக்கும். சில பெண் தெய்வங்கள் இடுப்பில் குழந்தையைக் கொண்டிருக்கும் என செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன.

ஆண் சிறு தெய்வங்கள் நின்ற கோலத்திலும், ஒரு கால் மட்டும் முழங்காலிட்ட கோலத்திலும், சில தெய்வங்கள் தவழ்ந்த கோலத்திலும் காணப்படுகின்றன. ஒரு காலை முழங்காலிட்ட நிலைமையில், வலக்கை ஓங்கிய நிலையில் ஆயுதம் ஏந்தி இருக்கும். இத்தோற்றத்தில் அமைந்த தெய்வங்களைச் 'நொண்டிச்சாமி' என்பார்கள். தவழ்ந்த கோலத்தில் அமைந்த தெய்வங்களை 'சப்பாணி' என்பார்கள்.

சில தெய்வங்கள் அவை சிறுதெய்வமா, பெருந்தெய்வமா என்று பிரித்தறிய இயலாதவாறும் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று 'காமாட்சி அம்மன்'ஆகும். பழம்பெரும் கோயில்களில் ஒன்றான காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் ஒரு பெருந்தெய்வக் கோயிலாகும். ஆயினும், கிராமப்புறங்களில் காமாட்சியம்மன் என்னும் பெயருடன் பிராமணப் பூசையின்றி இரத்தப் பலி பெறும் சிறுதெய்வமாகவே காணப்படுகிறது. எனவே, காமாட்சியம்மன் என்னும் பெருந்தெய்வம் சிறுதெய்வமாக இருந்து, இடைக்காலத்தில் பெருந்தெய்வமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைக் காணமுடிகின்றது.

## உருவமில்லாத தெய்வங்கள்

சிறுதெய்வக் கோயில்கள், உருவம் இல்லாதன, உருவம் உடையன என இரு வகையாகப் பிரிக்கப்படுவதுண்டு. புறங்களில் வளர்ந்துள்ளமரங்களையே தெய்வங்களாக வழிபடுதல் ஒரு


IOR PRESS

வகையாகும் சில இடங்களில் கல்லாலான கழுமரங்களை வழிபடுகின்றனர். சில கோயில்களில் பீடங்கள் மட்டும் உருவமின்றி வழிபடப்படுகின்றன. சில இடங்களில் நடப்பட்ட குத்துக்கற்களில் தெய்வம் உறைவதாக நம்பி மக்கள் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். தெய்வங்கள் வரிசையாக அமைந்துள்ள கோயில்களில் முக்கியமான தெய்வங்கள் மட்டும் ஒன்றிரண்டு உருவங்களாகவும், பிற தெய்வங்கள் பீடங்களாகவும் வழிபடப்படுகின்றதை கிராமப்புறங்களில் காணமுடிகின்றது. இத்தெய்வங்களும், சிறுதெய்வங்களாக பாவித்து வணங்கப்படுகின்றன.

வீரவழிபாட்டு நெறியில் இரண்டு சாரார் ஒரே தெய்வத்தை வழிபடுவதும் உண்டு. கொல்லப்பட்ட வீரனைச் சார்ந்த பிரிவினர் அவன் வீரத்தையும, பிற வரங்களையும் வேண்டி வழிபடுவர். கொன்ற பிரிவினர் கொல்லப்பட்ட வீரனின் ஆவியால் தாங்கள் பழிவாங்கபடக்கூடாது என்பதற்காக வணங்குவர் (Paramasivan, 2000).

மக்களையும், பயிர்களையும் நோய் வராமல் காத்தல், வந்த நோயிலிருந்து காத்தல், மன நலக் குறைவை சரி செய்தல், மகப்பேற்று வரந்தருதல், பயிரை நன்றாக விளையச் செய்தல் ஆகியவை பெண் தெய்வத்திடம் மக்கள் வழிபடும் வழிபாட்டுக் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

## பூசாரிகள்

சிறுதெய்வக் கோயில்களில் பிராமணர்கள் பூசாரிகளாக இருப்பதில்லை. குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவர்களின் கோவில்களில் பெரும்பாலும் அவ்வசாதியினரே பூசாரிகளாக இருப்பர். மேல் சாதியினருக்கான கோவில்களில் மண்பாண்டங்களும், மண்ணில் தெய்வ உருவங்களும் செய்யும் குயவர் (வேளார்) சாதியாரும், நந்தவனம் வைத்து பூத்தொடுக்கும் பண்டாரம் எனப்படும் சாதியாரும், பூசாரிகளாக இருப்பார்கள். பொதுவாக சிறுதெய்வக் கோயில்களில் ஆறுகால பூசைகளும் நடைபெறுவதில்லை.

## சாமியாடி - தோற்றமும் வழிபாடும்

சிறுதெய்வக் கோயில்களில் பூசாரிகள் சாமியாடிகளாக இருப்பதில்லை. வழிபாடுசெய்பவர்களே சாமியாடுவர். ஒவ்வொரு கோவில்களிலும் சாதிக்கொரு சாமியாடிகள் உண்டு. பெண் தெய்வக் கோவில்களில் ஆண்களும், ஆண் தெய்வக் கோவில்களில் பெண்களும் ஆடுவதுண்டு. பொதுவாக ஆண், பெண் இருவரும் சாமியாடும் பழக்கம் சிறு தெய்வ வழிபாட்டில் காணப்படுகின்றது. சாமியாட்டம் திருவிழாக் காலங்களில் மட்டுமே நடைபெறும்.

சாமியாடுபவரின் கைகளில் வேப்பிலையும், எலுமிச்சம் பழமும் காணப்படும். அந்த குறிப்பிட்ட சில தெய்வத்திற்குரிய ஆயுதங்களான அரிவாள், வாங்கரிவாள், சிறுபிரம்பு, பூண்கட்டிய தடிக்கம்பு, சாட்டை, வாள், கட்டாரி ஆகியவற்றை ஏந்திக் கொண்டு சாமி ஆடுவார். தீப்பந்தம், தீச்சட்டி ஏந்தியும் ஆடும் வழக்கம் உண்டு. மதுரை, நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களில் நீர்க்கரகம் எடுத்து தெய்வத்தின் பிரநிதியாக ஆடுவர். அவ்வாறு ஆடுபவர்களுக்கு 'கோமறத்தாடி' எனப் பெயர் வழங்கப்படுகின்றது. சாமியாடுபவர்கள் மஞ்சள் ஆடையும், கையில் வெள்ளிக் கடகமும், மஞ்சள் காப்புக்கயிறும் அணிந்திருப்பர்.

சில சிறுதெய்வக் கோவில்களில் சிவப்பு வண்ணக் கால் சட்டையுடன் காலில் சலங்கையைக் கட்டி கொண்டு சாமியாடுவர். பொதுவாக எல்லாத் திருக்கோவில்களிலும, சாமி ஆடுவோர் விரதம் மேற்கொண்டு திருக்கோவிலுக்கு வருகை புரிவது வழக்கமாகும். திருவிழாவிற்கு முன்னர் பத்து அல்லது பதினைந்து நாள் தொடங்கி, புலால் உண்பதைத் தவிர்த்தும், கட்டுக்கோப்பான விரத முறையை மேற்கொண்டும் இருப்பர். இவ்வாறு விரதம் மேற்கொள்வதன் வாயிலாகத் தாங்கள் எண்ணிய காரியம் விரைவில் ஈடேறும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்பட்டது.

சிறுதெய்வக் கோயில்களில் நடைபெறும் சாமி ஆட்டம் அல்லது தெய்வ ஆட்டம் பலவகையாகக் கூறப்படுகின்றது. 'திமிரி' என்னும் நாதஸ்வர இசைக்கும், மேளத்திற்கும் ஏற்ப

ஆண்களும், பெண்களும் ஆடுவர். சிறுதெய்வம் ஒரு சிலர் மீதுஇறங்கும். அவர்களை 'மருளாடி' சாமியாடி', 'கோமறத்தாடி' என ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ப அழைப்பர். சாமியாடுவோரில்சிலர் தெய்வத்தின் பிரதிநிதி போல கையிலும், தலையிலும் கரகம் வைத்துக் கொண்டு ஆடுவார். சிலர் ஆயுதங்களை ஏந்தியோ, வேப்பிலை, எலுமிச்சம் பழம் மட்டும் கையில் வைத்துக்கொண்டோ ஆடுவர். வேறு சிலர் கழுத்தில் பூமாலையை மட்டும் அணிந்து கொண்டு ஆடுவர். இவ்வகையான ஆட்டம் தவிர, வெவ்வேறு வகையான ஆடல்களும் சில இடங்களில் நடைபெறும். சாமியாடுவதில் வட்டாரத்திற்கு ஏற்ப வேறுபாடுகளும் உண்டு.

"தெய்வங்கள் வரிசையாக அமைந்த கோயில்களில் 'அய்யனார்' இருப்பினும், அது இரத்தப் பலி பெறாத தெய்வமாகும். எனவே அதே வளாகத்திலுள்ள பிற தெய்வங்களுக்கு இரத்த பலி இடும் போது, இரத்தப் பலி பெறாத அய்யனார் போன்ற தெய்வ உருவங்களைத் திரையிட்டு மறைத்துவிடுவர். இரத்தப் பலி பெறாத தெய்வங்களை நாட்டுப்புறத்து வழக்கு மரபில் 'சுத்தமுகத் தெய்வம்' என்று கூறுவர்" (Paramasivan, 2000).

## சிறுதெய்வத்திற்கானப் படையல்

சிறுதெய்வங்களை வழிபடும் விழாக்காலங்களில், அத்தெய்வங்களுக்கென்று தனியாக சில உணவுப் பொருட்கள் சமைக்கப்பட்டு படைக்கப்படும். திருவிழாவில் இறுதி நிகழ்ச்சியாகச் சில தெய்வங்களுக்கு ஊன் (ஆட்டுக்கறி) கலந்த சோறு படைக்கப்படுவதும் வழக்கமாகும். நெல்லை மாவட்டத்தில் இதனை 'சோறு' எனப் பெயரிட்டு அழைப்பர்.

### நேர்த்திக் கடன்

காணிக்கை அல்லது நேர்த்திக்கடனாகச் சிறுதெய்வக் கோயில்களுக்கு நெல் முதலிய தானியங்கள் நேர்த்திக்கடனாகச் செலுத்தப்படுகின்றது. சிறு தெய்வக் கோயில்களில் காணப்படும் தெய்வத்திற்குரிய ஆயுதங்களை (வேல், வாள், தடி, கட்டாரி, அரிவாள், சாட்டை, பாதுகை, மணி) பக்தர்களே நேர்த்திக் கடனாகச் செய்து சமர்ப்பிக்கின்றனர்.

### சிறு தெய்வ வழிபாடு - சமூக மாற்றம்

இருபதாம் நூற்றாண்டில் சமூக மாற்றங்கள் காரணமாகப் பெண் சிறுதெய்வங்களில் சில தெய்வங்கள் பெருந்தெய்வங்களாக மாற்றப்பட்டுள்ளது. இரத்தப் பலியினை நிறுத்துவது, பெருந்தெய்வக் கோயில்களைப் போலப் புரட்டாசி மாதம் நவராத்திரித் திருவிழாவினைக் கொண்டாடுவது, சில இடங்களில் பிராமணரைப் பூசாரியாக்குவது முதலிய படிநிலைகளின் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சில கோவில்களில் 'சாமியாட்டம்' காலப்போக்கில், ஆடுவோரின்றி மறைந்துவிட்டது. இதுவே மிகப்பெரிய மாற்றமாகக் கணக்கிடப்படுகின்றது. ஒரு சிறு தெய்வக் கோயிலை வழிபடும் பக்தர்கள் சமூக மாற்றங்களினால் பொருளாதார வலிமை பெறுவதும், பணக்காரர் அறக்காவலர் பொறுப்புக்கு வருவதும் அம்மாற்றத்திற்கு அடிப்படைக் காரணங்களாகும். இம்மாற்றம் நகர்ப்புறங்களில் பெருமளவில் நடந்துவருவதைக் காணலாம்.

## முடிவுரை

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவராக, எல்லாவற்றையும் இயக்குபவராக இறை நம்பிக்கையை அசைக்கமுடியாத நம்பிக்கையாகக் கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். 'ஊழ்வினை' விதி என்றுரைத்து, அதன் பிடியில் இருந்து மீள இறை வழிபாடே உறுதுணையாக நிற்கும் என்பதை ஏற்று வழிபட்டார்கள், திணைக்கு வகுக்கப்பட்ட தெய்வ மரபுகள் பெருந்தெய்வங்களையும், குலத்தையும், குடும்பத்தையும் காக்கும் தெய்வங்கள் சிறுதெய்வங்களாகவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்று சிறுதெய்வ வழிபாட்டு முறை சமூக சமய விழாவாக கொண்டாடப்பட்டிருக்கிற மாற்றத்தினைக் கட்டுரைப் பொருள் எடுத்துரைக்கிறது.

## References

Paramasivan, T. (2000) Panpattu asaivukal, Kalachuvadu Publications, Nagarkovil, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License